**பதவிஸ்ரீபுர பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 25 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதவிஸ்ரீபுர பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இயந்திர, உபகரணப் பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 387,389 தொகையான இயந்திர, உபகரண மீதி ரூபா 307,979 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் இயந்திர, உபகரண மீதி ரூபா 79,410 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து நிர்மாணிக்கப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட பழைய மதவச்சி, சேவா ஜனபதய, ஜயந்திவெவ, கொலொன்கொல்ல என்ற நீர் செயற்திட்டங்களின் பெறுமதியான ரூபா 149,452,290 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 11,628,486 பெறுமதியான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) மாகாண நிதி விதி இலக்கம் 237 | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 16,702 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,029,656 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,358,125 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் ரூபா 2,613,489 இனால் அதிகரித்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 3,671,531 இனால் அதிகரிப்பதற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| --- | --- | --- | --- |
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வாடகை | 750 | 698 | 234 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 194 | 194 | 89 |
| ஏனைய வருமானம் | 8,654 | 9,282 | 4,694 |

### 2.2.2 கடை வாடகை

02 வருடங்கள் முதல் 19 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 234,039 கூட்டுமொத்தமான கிடைக்க வேண்டிய கடை வாடகையை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2015 பெப்ரவரி 07 ஆந் திகதி நடாத்தப்பட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சிபாரிசு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 17 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 08 வருட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 180,664 கூட்டுத்தொகையான முற்பணம் 08 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 17 ஆந் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 18 ஆம் இலக்க நிதி திருத்த அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் பிரதேச சபையின் பிரதான அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 38,670,526 தொகைக்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 96,676 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணிகளின் சட்டரீதியான உரித்தைக் கையேற்காமல் ரூபா 84,736,340 தொகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அந்த கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. சபையினால் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் சட்டரீதியான உரித்தைக் கையேற்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறன்னர்கள்

(அ) கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் சமூக பங்களிப்பாளர்களினால் குழாயைப் பதிப்பதற்காக பிரதேச சபைக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட UPVC குழாய் மற்றும் பொருந்துகளில் எஞ்சிய பாரியளவான குழாய் இருப்பொன்று பதவிஸ்ரீபுர, ஜயந்தபுர மற்றும் சமன்புர போன்ற களஞ்சியங்களில் முறையற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த குழாய் இருப்புக்களை முறையாகக் களஞ்சியப்படுத்தி பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்து ஏனைய செயற்பாடுகளுக்கேனும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) பிரதேச சபை ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 4,895,124 ஒப்பந்தப் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட சிங்ஹபுர கிராம சேவையாளர் பிரிவின் தாய், சேய் சிகிச்சை நிலையம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. கட்டிடத்திற்கு மின்சாரம் மற்றும் நீர் வழங்கலைப் பெற்றுக்

கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் சபையினால் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 17 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்படாமையினால் சிகிச்சை நிலைய நிர்மாணத்தின் நோக்கமான பழைய மதவாச்சி கிராம சேவையாளர் பிரிவின் 250 குடும்பங்களின் பெண்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதார பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதமாகியிருந்தது.

### 3.3 சுற்றாடல் பிரச்சினைகள்

பதவிஸ்ரீபுர பிரதேச செயலகப் பிரிவிற்குரிய 09 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்களுக்கு குடிநீர் இன்மையினால் மிகவும் வசதியீனத்திற்குட்பட்டிருந்ததுடன், பிரதேச சபை அறிக்கையின் பிரகாரம் 304 சிறுநீரக நோயாளர்கள் 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் அறிக்கையிடப்பட்டிருந்தனர். கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வு அறிக்கையின் படி இப்பிரிவின் தண்ணீரில் Turbidity, Ammonia, Phosphte, Nitrite, Managanese, Alkalinity, Hatdness என்பன அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. Dug well மற்றும் Tube Wells களிலிருந்து பெறப்படும் நீர் சுத்திகரிக்கப்படாமல் நேரடியாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பழைய மதவாச்சி, சேவா ஜனபதய, ஜயந்திரவெல, கொலொன்கொல்ல போன்ற நீர் உத்தேசத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டமையால் தரமான குடிநீரை மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 17 | 10 | 07 |
| மூன்றாம் நிலை | 24 | 21 | 03 |
| மொத்தம் | 43 | 32 | 11 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகர் மற்றும் மின் தொழில்நுட்பவியலாளர் மற்றும் சாரதி பதவிகளில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 17 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்